**சார்பு நீதிமன்ற, ஊத்தங்கரை**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

| **எம்.சி.ஓ.பி.எண்** | 102/2020 | **ம.த.சா** | 1 |
|---|---|---|---|
| **பெயர்** | பெரியண்ணன் | **வயது** | |
| **க/பெ** | | **ஊர்** | |
| **தொழில்** | | **வட்டம்** | |
| **சாதி** | | **மாவட்டம்** | |

The Oaths Act 1969, Act No.44/1969-ன் விதிமுறைகளின் படி 15.06.2023 நாளாகிய இன்று Tr.Senthil Kumar Rajavel,L.L.M., சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கின் மனுதாரர் எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனது தகவலின் பெயரில் தயார் செய்யப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள ஆவணங்களை முறையே ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.16 வரை குறியீடு செய்து மனுவில் கோரியுள்ளவாறு உத்தரவு பிறப்பிக்க கோருகிறேன்.

**3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் அடிப்பட்டு இறந்த பூபழனி என் மனைவி ஆவார். நான் 1-ம் மனுதாரர் 2-ம் மனுதாரர் என் மகன். 28.09.2019 அன்று மதியம் 12.00 மணி அளவில் செல்லம்பட்டி to போச்சம்பள்ளி சாலையில் சின்ன கரடியூர் அரிசி ஆலை அருகே விபத்து நடந்தது. TN -24-K-0545 பதிவெண் கொண்ட வாகனம் எனக்கு சொந்தமானது ஆகும். விபத்து அன்று அவ்வாகனத்தை நான் தான் ஓட்டி சென்றேன். விபத்து குறித்து நாகரசம்பட்டி காவல் நிலையத்தில் நான்தான் புகார் அளித்திருந்தேன். எழுத்துமூலமான புகார் மனுவினை கொடுத்தேன். புகார் மனுவில் நானும் எனது பேத்தி சன்ஜனா மற்றும் என் மனைவியும் விபத்து சமயத்தில் இரு சக்கர வாகனத்தில் பயணித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இருக்கர வாகனம் ஓட்ட தகுந்த உரிமம் உள்ளதா என்றால் உள்ளது, மா.சா.ஆ.16 ஆவணம் 1985 ஆண்டு பெறப்பட்டது. மேற்படி உரிமம் காலாவதி ஆகிவிட்டது என்றாலும் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு தகுந்த உரிமம் பெறவில்லை என்றாலும் சரியல்ல. இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எங்கள் மீது மோதிய வாகனம் நான்கு சக்கர கார் வாகனம் ஆகும். மேற்படி வாகனம் எனது பின் பக்கம் வந்து மோதியது. மோட்டார் வாகன

ஆய்வறிக்கையில் இருசக்கர வாகனம் சேதம் குறிப்பிடப்பட்டுள்ளதில் வலது பக்க கைபிடி, வலது பக்க முன்புற தடுப்பு கம்பி, வலது பக்க சீட்டில் அடியில் சேதம் உள்ளதாக குறிபிடப்பட்டுள்ளது என்றாலும் இருசக்கர வாகனத்தின் பின்புறம் அடிப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான்கு சக்கர கார் வாகனத்தில் இடது பக்க கதவில் சேதாரம் உள்ளது என்றாலும் நான் கூறுவதுபோல் பின்புறமாக வந்து மோதி இருந்தால் அவ்வாகனத்தில் முன்புறம் சேதாரம் ஏற்பட்டு இருக்கும் என்றாலும் ஆகவேதான் வாகனத்தின் முன் சேதாரம் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் அனுமதிக்கப்பட்ட நபர்களுக்கு மிகுதியாகவும் ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் சாலை விதிகளை பின் பற்றாமலும் நான் ஓட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. வாகனத்தை தீடியர் என வலது புறம் திருப்பி காரில் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் நான் மட்டும் தலை கவசம் அணிந்து இருந்தேன். என் மனைவி பின்புறமாக விழுந்து தலையில் அடிப்படதானால் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டார் என்றால் சரிதான், உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்ட தெரியாமல் ஓட்டி விபத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றாலும் விபத்துக்கு நான் தான் காரணம் என்றாலும் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான். வாகன ஆய்வின் போது ஓட்டுநர் உரிமத்தை கொடுக்கவில்லை என்றால் சரிதான், உரிமம் உள்ளது. விபத்துக்கு நானே காரணம் என்பதால் 3-ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை கொடுக்க கடமைபட்டவரல்ல என்றால் சரியல்ல. என் மனைவி வியாபாரம் செய்ததையும் வருவாய் ஈட்டியதையும் காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தின் போது என் மனைவிக்கு 40 வயது. நான் எந்த வேலையும் செய்யவில்லை. 2-ம் மனுதாரருக்கு 20 வயது. 2-ம் மனுதாரர் வீட்டில் உள்ளார். நஷ்டஈடு கோருவதற்காக எந்த வேலை இல்லை என்று கூறுகிறோம் என்றாலும் வருவாய் இழப்பு இல்லை என்றாலும் மனுவில் பல்வேறு தலைப்புகளில் கோரிய தொகை அதிகாமானது என்றாலும் சரியல்ல. விபத்து ஏற்பட்ட உடன் என் மனைவி போச்சம்பள்ளி மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். பிறகு சேலம் மருத்துமனைக்கு அழைத்து சென்றேன். சேலம் மருத்துவமனையில் 30.09.2019 அன்று என் மனைவி இறந்து விட்டார். எதிர்மனுதார் கார் ஓட்டுநரால் அஜாக்காரதையால் விபத்து ஏற்படவில்லை என்றாலும் எனது அஜாக்கரதையால் ஏற்பட்டதால் 3-ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனுவை தள்ளுப்படி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Subordinate Judge

SENTHIL KUMAR RAJAVEL

Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL
Location: Uthangarai